# யோக நரசிம்மர் ஆலயம்

## சாந்திப்பிரியா



முதலில் ஒன்பது அவதாரங்களை எடுத்துள்ள பகவான் நரசிம்மர் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்? ஒரு முறை ஹிரண்யகசிபு என்ற அரக்கன் பூமியை

ஆண்டு வந்தான். அவன் கடுமையான தவம் செய்து பகவான் பிரும்மாவிடம் இருந்து தன்னை அழிக்க முடியாத வரம் பெற்றான். அதன்படி இரவிலும், பகலிலும் மனிதனோ, மிருகமோ, ஆயுதங்களோ, எந்த உலகிலும் அவனைக் கொல்ல முடியாது. அந்த வரங்களை பெற்று இருந்தவன் அட்டகாசம் செய்து அனைத்து தேவர்களையும் துன்புறுத்தி வந்தான். தானே கடவுள் என்றான். அவன் கொட்டத்தை அடக்கி அவனை அழிக்க விரும்பிய பகவான் பிரும்மா பகவான் விஷ்ணுவின் உதவியை நாட வேண்டியதாயிற்று. ஹிரண்யகசிபுவிற்குப் பிறந்த மகன் பிரகலாதன். அவன் பகவான் விஷ்ணு பக்தன். அவன் பகவான் விஷ்ணுவை வணங்குவதை ஏற்காத ஹிரண்யகசிபு அவனை வம்புக்கு இழுக்க, ஒரு நாள் பகலோ இரவோ இல்லாத இரண்டும் கூடும் அந்தி வேளையில், பகவான் விஷ்ணு இருப்பதாக பிரகலாதன் கூறிய தூணை தன்னுடைய காலால் எட்டி உதைக்க அதில் இருந்து வெளிப்பட்ட மனிதனும் அல்லாத, மிருகமும் அல்லாத சிங்கத்தின் தலையைக் கொண்ட பகவான் விஷ்ணு தன்னுடைய நகங்களினால் அவனைக் கீறி அழிக்கின்றார். இதுவே அவர் எடுத்த பகவான் நரசிம்ம அவதாரப் பின்னணி.

அந்த நிகழ்ச்சியினால் ஏற்பட்ட கோபம் பகவான் விஷ்ணுவான நரசிம்மருக்கு அடங்காமல் இருக்க அனைவரும் பயந்து போய் பிரகலாதனை அவர் சாந்தம் அடைய ஏதும் வழி செய்யுமாறு கேட்டுக் கொள்ள அவனும் பகவான் விஷ்ணுவை பிரார்தித்து அவருடைய

கோபத்தை அடக்க அவர் பகவான் லஷ்மி நரசிம்மராக கோபம் அடக்கிய யோக நிலையில் காட்சி தந்தார். அவர் பகவான் நரசிம்ம அவதாரத்தில் எடுத்த ஒன்பது அவதாரங்கள் பகவான் ஜ்வால நரசிம்மர், பகவான் பார்கவ நரசிம்மர், பகவான் யோக நரசிம்மர், பகவான் பகவான் குரோத நரசிம்மர், பகவான் கராஞ்சா நரசிம்மர், பகவான் சத்ரவாத நரசிம்மர், பகவான் பாவன நரசிம்மர், பகவான் அபிலோஹ நரசிம்மர், மற்றும் பகவான் மஹோல நரசிம்மர் என்பன. அவர் தன்னுடைய மனைவி சகிதம் இருக்கும் பொழுது பகவான் லஷ்மி நரசிம்மராக வணங்கப்படுகிறார். உலகில் உள்ள பகவான் நரசிம்ம ஆலயங்களில் பகவான் யோக நரசிம்மருக்கும், பகவான் லஷ்மி நரசிம்மருக்கும் அனேக ஆலயங்கள் உள்ளன.

அப்படிப்பட்ட பகவான் யோக நரசிம்மருக்கு கர்னாடக மானிலத்தில் புகழ் பெற்ற இரண்டு பகவான் நரசிம்மஸ்வாமி ஆலயங்கள் உள்ளன. தொட்டாமல்லூர் என்ற இடத்தில் இருந்து சுமார் நான்கு கி.மீ தொலைவில் உள்ளது குருனேகரி என்ற பெயருடைய வனம். ஒரு முறை அந்த காட்டில் தவத்தில் இருந்த கன்வ ரிஷி நரசிம்மர் ஒரு மலை உச்சி மீது ஸ்தம்ப உருவில் இருப்பது போல உணர்ந்தார். அவரது தவ வலிமையினால் அதை உண்மை எனவும் தெரிந்து கொண்டார். ஆகவே அந்த உண்மையை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் விரும்பினார்.

காடு கோல்லா என்ற மலைக்குடி மக்கள் அந்த காட்டில் வந்து வசிக்கத் துவங்கிய நேரம் அது. அவர்கள் தம்மிடம் இருந்த பசு மாடுகள் மற்றும் கால்நடைகளை அதன் உணவிற்காக அந்த மலை உச்சிவரை ஓட்டிச் சென்று வருவது வழக்கம். அங்குள்ள செடி, கொடி தழைகளை அவை தின்ற பின் மீண்டும் அவற்றை அழைத்து வந்து விடுவார்கள். இப்படி இருக்கையில் ஒரு மாடு தினமும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த புதருக்கு அருகில் சென்று தன் மடியில் இருந்து பாலை அந்த இடத்தில் வழிய விட்டப் பின் திரும்பி வந்தது. அதை கவனித்த கான்வ ரிஷி, பகவான் நரசிம்மர் மலை உச்சி மீது ஸ்தம்ப உருவில் இருப்பதை உலகிற்குத் தெரிய வைக்க அதுவே தக்கத் தருணம் என எண்ணினார். ஆகவே தன்னையும் ஒரு காடு கோல்லா மனிதன் போல உரு மாற்றிக் கொண்டு அந்த பசு மாடு பாலை சுரந்து கொண்டு இருந்த பொழுது மற்றவர்களை அழைத்து அதைக் காட்டினார். அதை பார்த்த மற்றவர்கள் மறுநாளும் அந்த மாட்டை பின் தொடர்ந்து சென்று பார்க்க அதுவும் முனிவர் கூறியது போலவே அந்த புதரில் பாலை சுரப்பதைக் கண்டு வியந்தனர்.

உடனே அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த முனிவர் கூறியபடி அந்த புதரை வெட்டி உள்ளே என்ன இருக்கின்றது எனப் பார்க்க அங்கு ஸ்தம்பத்தில் பகவான் நரசிம்மர் சிலை உள்ளதைக் கண்டனர். ஓடிச் சென்று கான்வ முனிவரிடம் அதைக் கூற அவர் அந்த மூர்த்திக்கு செய்ய வேண்டிய பூஜை, புனஸ்காரங்களை

அவர்களுக்குக் கற்றுத் தந்தப் பின் அங்கிருந்து கிளம்பிப் சென்றவர் எங்கோ போய் மாயமாக மறைந்து விட்டார். அது அஹோபல மடத்திற்கு இணையான இடமாக கருதப்பட்டது. அதற்குப் பின் அந்த காட்டுக் குடியினர் அந்த ஆலயத்தை பராமரித்து பூஜை புனஸ்காரங்களை செய்து வருகின்றனர். இப்போதும் அந்த கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்ட காடு கோல்லாவின் சந்ததியினர வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆலயத்தை தம் நிர்வாகத்தில் வைத்துக் கொண்டு உள்ளனர். வருடத்திற்கு ஒரு முறை உற்சவமும், ஸ்வாமி ஊர்வலமும் நடை பெறுகின்றது.

# Lord Yoga Narasimha

## Santhipriya



Who is Lord Narasimha who took many incarnations? Once upon a time a demon named Hiranyakashibu came to rule the earth. He performed severe penance and received special boon from Lord Brahma which gave him invincibility from death. According to the boon he received he cannot be killed either by human or by beast or by any animal or by any weapons either in the day

or in the night. Once he received such a powerful boon, he unleashed terror in the universe torturing everyone and persecuted even divines. Therefore the celestial forces met Lord Vishnu and requested him to save them from his tyranny. Hiranyakashibu begot a son named Prahlada who was a devotee of Lord Vishnu. Hiranyakashibu, who did not like his son worshiping Lord Vishnu attempted to dissuade him. Once when in an argument Prahlada pointing out a pillar, told his father that Lord Vishnu was also inside that pillar. When Hiranyakashibu refuted his son's claim and kicked the pillar to show his disrespecting, angered by his act, Lord Vishnu in ferocious form into that of half man half animal, appeared from a pillar, dragged Hiranyakashibu at the twilight period- when it was neither day, nor night- and killed him tearing him with his nails. That incarnation of Lord Vishnu was termed as Lord Narasimha manifestation which is the background story of Lord Narasimha.

The anger of Lord Narasimha refused to cool down and afraid of his fierce look after killing Hiranyakashibu, every one requested Prahlada to request the Lord to cool down. Heeding to the prayer of Prahlada, Lord Narasimha calmed down to appear as Lord Yoga Narasimha with his consort. The nine incarnations taken by Lord Vishnu were Lord Jwala Narasimha, Lord Bhargava Narasimha, Lord Yoga Narasimha, Lord Krotha Narasimha, Lord Karanja Narasimha, Lord Chathravada Narasimha, Lord Bhavana Narasimha, Lord Abiloga Narasimha and Lord Mahola

Narasimha. He is worshipped as Lord Lakshmi Narasimha when he appears with his consort.

There are two famous temples for Lord Narasimha in the state of Karnataka which are dedicated to Lord Yoga Narasimha. Four Kilometers away from there was a forest named Kurunegari where Maharishi Kanva was in penance. Once with his yogic powers, he saw Lord Narasimha standing in the forest in the form of a pillar. Therefore he desired that the said fact be made known to the mankind in the universe.

The folks of Kadugolla who had settled in the said forest used to drive their cows and cattle to the top of the mountain for food. Once the cattle satiated their hunger eating vines, they used to be driven back home. However once, one of the shepherds noticed the strange act of a Cow daily milching near a specific bush and come back after releasing milk from her lap. Hearing the strange phenomenon from the shepherd, with his yogic power Kanwa Rishi understood that Lord Narasimha must have settled there and understood that it was the appropriate time to let the world know that the Lord was in the form of a pillar there and therefore transformed himself into that of a sheppard belonging to Kadugolla community and called everyone in his group to show the miracle act of the Cow which was milching milk from her lap on that specific spot. Everyone followed the Cow for two more days and saw the miracle act happening and were surprised to note it.

Immediately the folks joined together and cut down the bush as per the advice of the sage only to see a statue of Lord lying there. When they informed Kanva Rishi, he taught them the manner in which the daily pooja and other rituals are to be done to the deity.  After preaching them everything on the ritual, he went away and became untraceable thereafter. Even today the folks of Kadugolla continue to perform pooja and other rituals as advised by the Rishi. The temple is maintained by them, performing annual rituals.